தமிழ்நாடு அரசு

# இரண்டாம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

தொகுதி 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – *2019*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

*- மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு


வெற்றி! வெற்றி! வெற்றி!



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



00_1st_Std_Tamil_CBSE_FM.indd 6 20/01/19 2:00 PM

## நம்பிக்கைக்குரிய ஆசிரியர்களே!



கடந்தகால கற்றலை அடித்தளமாகக்கொண்டு நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கேற்ற மொழித்திறன்களைக் குழந்தைகளிடம் வளர்க்கும் நோக்கில் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

முதல் பருவத்தில் கற்றுணர்ந்த அடிப்படை மொழித்திறன்களை நினைவுகூர்ந்து வெளிப்படுத்தும் வகையில் "என் நினைவில்" என்கிற தலைப்பில் ஆர்வமூட்டும் செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.



மனமகிழ்வு, கற்பனை, தன்னம்பிக்கை, நற்பண்புகள், வாழ்வியல் திறன்கள் ஆகியவற்றைப் பெருகச்செய்யும் நோக்குடன் பாடல்கள் கொடுக்கப் பட்டுள்ளன.



சொற்களற்ற படக்கதைகள், சொற்கள், சிறு தொடர்களுடன் கூடிய படக்கதைகள், உரையாடல் வடிவிலான படக்கதைகள் எனப் பல்வேறு வகைகளில் கதைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.





மொழித்திறன்களுள் பேசுதல் திறனே நடைமுறையில் பெருமளவில் பயன்படுத்தப்படும் ஒன்றாக உள்ளது. அதிலும் குறிப்பாக உரையாடல் என்பது வாழ்வின் அன்றாட நிகழ்வுகளுள் இன்றியமையாதது. அத்தகு உரையாடல் வடிவில் பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன.



குழந்தைகள் தாமே பாடப்பகுதிகளைப் படித்தறியும் திறன்பெறும் வகையில் தொடக்கத்தில் எளிய சொற்களைப் படிக்க வாய்ப்பளித்து மெல்ல மெல்ல சிறுசிறு சொற்றொடர்களைப் படிக்கும் நிலைக்கு இட்டுச்செல்லும் வகையில் பாடப்பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.



செய்யுள் பகுதியான ஆத்திசூடி, எளிதில் பொருளுணர்ந்து கொள்ளும் வகையில் படக்கதைகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது.





சொற்கள், சிறுசிறு தொடர்கள் ஆகியவற்றைக் குழந்தைகள் தாமே சொந்த நடையில் பேச, எழுத விருப்புடன் முன்வரும் வகையில் பயிற்சிகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

புதிர்களை விடுவிப்பதும் தேடிக் கண்டறிவதும் குழந்தைகளின் பெரு விருப்பங்களாகும். இவ்வியல்புகளைக் கற்றலுக்குப் பயன்படுத்தும் நோக்கிலும் இயற்கையை வியக்க, போற்ற, பாதுகாக்கத் தேவையான நுண்ணுணர்வுகளைப் பெற ஏதுவாகவும் பாடப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.





சொல்லிக்கொடுத்து திரும்பச் சொல்லவைக்கும் மனன முறையை விடுத்து, கலந்துரையாடவும், கேள்வி கேட்கவும், தருக்க முறையில் சிந்திக்கவும், சிந்தித்தவற்றை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் கருத்துகளையும் உணர்வுகளையும் உள்வாங்கி அவர்களை நெறிப்படுத்த இப்பகுதிகள் உதவும்.





குழந்தைகள், இயங்கிக்கொண்டே இருப்பவர்கள். இதனைக் கருத்தில் கொண்டு குழந்தைகளின் பல்வேறு நுண்ணறிவுகள், கற்கும் பாங்குகள், இயல்புகள், தேவைகள், விருப்பங்கள், ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்கும் வகையில் இப்பாடநூல் உருவாக்கப் பட்டுள்ளது.



இப்பாடநூல் உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கங்களை உணர்ந்து, குழந்தைகள் கற்றலில் ஈடுபட போதிய வாய்ப்பளித்து, மொழிப்பாடக் கற்றலை இனிமையான, பயன்மிக்க அனுபவமாக நிகழ்த்திக்காட்டும் பெரும்பொறுப்பு நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நமது பயணம் மிகப்பெரிது, மிக இனிது. குழந்தைமையைக் கொண்டாடுவோம்! வகுப்பறை வண்ணமயமாகட்டும்!


அன்புடன்,
ஆக்கியோர்.

# பொருளடக்கம்


என் நினைவில் 1



1 அழகுத் தோட்டம் 7



2 நண்பரைக் கண்டுபிடி! 12



3 பூம்வண்டி 20



4 வாழ்த்தலாம் வாங்க 24




5 ஓடி விளையாடு பாப்பா 28



6 ஆத்திசூடி 31



வந்தபாதை 38




3G1NJN

*மின் நூல்*

4QCCLZ

*மதிப்பீடு*

B307_2_TAM_LANG_T1

*இணைய வளங்கள்*

QR GUIDE

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

உங்கள் திறன் பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியை பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

செயலியை திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தி பாடநூலில் உள்ள விரைவு குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.

திரையில் தோன்றும் கேமராவை பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.

ஸ்கேன் செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாட பகுதிகளை பயன்படுத்தலாம்.

குறிப்பு: இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஓர் QR code Scanner ஐ பயன்படுத்தவும்.



## என் நினைவில்

# எங்கே வந்தார்கள்?

சுருங்கி விரிந்து
சுருங்கி விரிந்து
புழு வந்தது



வளைந்து நெளிந்து
வளைந்து நெளிந்து
பாம்பு வந்தது





தத்தித் தாவி
தத்தித் தாவி
தவளை வந்தது

கூவிப் பாடி
கூவிப் பாடி
குயில் வந்தது



மெல்ல நகர்ந்து
மெல்ல நகர்ந்து
ஆமை வந்தது





அசைந்து ஆடி
அசைந்து ஆடி
யானை வந்தது

பதுங்கிப் பாய்ந்து
பதுங்கிப் பாய்ந்து
...................... வந்தது

தோகை விரித்து
தோகை விரித்து
...................... வந்தது

குதித்து ஓடி
குதித்து ஓடி
...................... வந்தது

எல்லாரும் எங்கே வந்தார்கள்?

சிறுசிறு தொடர்களை சொல்லக்கேட்டு, பின்தொடர்ந்து கூறுக.

எல்லாரும் அருகில் உள்ள அருவியில் குளிக்க வந்தார்கள்.

குளிக்க வந்த நண்பர்களுக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்



பலமுறை சொல்லிப் பழகுக

வழலைக் கட்டி
நழுவி விழுந்தது

ஆற்றங்கரையின் ஓரம்
பாறையெல்லாம் ஈரம்


கிளையின் நிழல்
மலையில் விழுந்தது

வெள்ளை முயல்கள் வயலிலே
துள்ளி விளையாடின

முதலையும் தவளையும்
மழையில் நனைந்தன


குளக்கரையோரத்துக் குழி
குதித்து விழுந்தது நரி

படம் பார்த்துக் கதையைக் கூறுக



கதைக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக


## அகரவரிசைமுறை அறிவோம்




## அகரவரிசைப்படுத்துக

சீப்பு, சங்கு, சூரியன், சாட்டை, சிங்கம், சேவல், சுண்டல்,

சௌ சௌ, செடி, சொட்டுமருந்து, சைகை, சோளம்



## உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக



ஆற்றின் இருபுறம் – கரை

ஆடையில் படிவது – கறை





உயர்ந்து நிற்பது – மலை

உயிர்களைக் காப்பது – மழை





நீரில் மலர்வது – அல்லி

நீரை எடுத்தார் – அள்ளி





விளக்கில் கிடைப்பது – ஒளி

வெடித்தால் எழுவது – ஒலி





மாட்டிற்கு இருப்பது – வால்

மரத்தை அறுப்பது – வாள்







சுவரில் ஊர்வது – பல்லி

சுவைத்துக் கற்க – பள்ளி



# கை! வை! வரை!







இவற்றையும்
வரைந்து
பாருங்கள்



H4NRFA

# 1. அழகுத் தோட்டம்

தோட்டத்திலே வண்ணப்பூவும்
பூத்துக் குலுங்குது
பார்த்ததுமே சின்னத்தேனீ
பாட்டுப் பாடுது

பசுமையான புல்லைத்தேடி
மாடும் மேயுது
பக்கத்திலே கன்றுக்குட்டி
துள்ளி ஓடுது

உயரமான மரத்தினிலே
பழமும் தொங்குது
பச்சைக்கிளி பறந்துவந்து
கொத்தப் பார்க்குது

அழகுத்தோட்டம் பார்க்கும்போதே
நம்மை இழுக்குது
ஆட்டம்ஆடி பாட்டுப்பாட
ஆசை பொங்குது.



**பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.**

# பயிற்சி

## ஒலித்துப் பழகுக

பூத்துக் குலுங்குது | பாட்டுப் பாடுது | துள்ளி ஓடுது

மாடும் மேயுது | பழமும் தொங்குது | கொத்தப் பார்க்குது

நம்மை இழுக்குது | ஆசை பொங்குது

## படித்தும் எழுதியும் பழகுக

ஆசை | சின்னத்தேனீ

பச்சைக்கிளி | கன்றுக்குட்டி | தோட்டம்

3I8DLR

## படத்தை உரிய சொல்லுடன் இணைக்க






பச்சைக்கிளி

வண்ணப்பூ

சின்னத்தேனீ

பசும்புல்

உயரமான மரம்







## பேசுவோம் வாங்க!

அழகுத்தோட்டத்தில் எவையெல்லாம் இருந்தன?

## உனக்குப் பிடித்த வருணனைத் தொடரைக் ✓ குறியிடுக



இனிப்புப் பழம்

பழுத்த பழம்

சிவந்த பழம்



நல்லநாய்க்குட்டி

சின்ன நாய்க்குட்டி

கருப்பு நாய்க்குட்டி



வட்ட நிலா

முழு நிலா

வெள்ளை நிலா



ஆடும் மயில்

அழகு மயில்

வண்ண மயில்

## படத்திற்குப் பொருத்தமான வருணனைத் தொடரை எழுதுக









# சொல்லோடு விளையாடு




குரங்கு குருவி விறகு கும்மி மிளகு

## உரிய எழுத்தை எழுதி நிரப்புக



ஆமை மைனா



எறும்___ ___றா



கு___ ___க்குட்டை

## முடியும் எழுத்தில் தொடங்கும் சொல்லை எழுதுக

| | |
|---|---|
| சிறகு → ______ | அடுப்பு → ______ |
| சிரிப்பு → ______ | அம்மி → ______ |

புகை

மிளகு

புத்தாடை

குயில்

# விரலோவியம்

## நீங்களும் செய்து மகிழுங்கள்





# 2. நண்பரைக் கண்டுபிடி!

DPZP7Z







முயல் : நீங்களே கண்டுபிடியுங்களேன்.
நான்கு கால்கள் கொண்டவர்.

வாத்து : மாடுதானே?

முயல் : இல்லை.
கூரான கொம்புகள் இருக்காது.
பெரிய உருவம் கொண்டவர்.

குரங்கு : ஓ... நான்
சொல்லட்டுமா...
யானைதானே?

முயல் : ஊகூம். நீண்ட
தும்பிக்கை இருக்காது.
வேகமாக ஓடுவார்.





கழுகு : எனக்குத் தெரியும்.
சிறுத்தைதானே?

முயல் : இல்லை.
கருப்புப் புள்ளிகள் இருக்காது.
நீண்ட கால்கள் இருக்கும்.

நரி : வரிக்குதிரையா?

முயல் : இல்லை.
கருப்பு வெள்ளை வரிகள்
இருக்காது. நீண்ட கழுத்தைக்
கொண்டவர்.





**கிளி :** ஐ! தெரிந்துவிட்டது.
ஒட்டகம்தானே?

**முயல் :** இல்லையே!
உருண்டையான திமில்
இருக்காது. உடலில்
கட்டங்கள் இருக்கும்.

**அனைவரும் :** ஓ! நாங்கள்
கண்டுபிடித்துவிட்டோம்.

புது நண்பர் வந்தார். விளையாட்டு தொடங்கியது.



புது நண்பர் யாரென்று உங்களுக்குத் தெரியும்தானே?

அவர் பெயரை எழுதுங்கள்.................................................................................

# பயிற்சி

## படித்துப் பழகுக

கூரான கொம்புகள்

நீண்ட தும்பிக்கை

கருப்புப் புள்ளிகள்

உருண்டையான திமில்

கருப்பு வெள்ளை வரிகள்

## எழுதிப் பழகுக

நண்பர்

திமில்

தும்பிக்கை

கொம்புகள்

வரிகள்

ஒட்டகச்சிவிங்கி

கழுத்து

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

SBG31I

1. நீண்ட தும்பிக்கை உடையது யானை. ☐
2. ஒட்டகச் சிவிங்கியின் முதுகில் திமில் இருக்கும். ☐
3. சிறுத்தையின் உடலில் கருப்பு வெள்ளை வரிகள் இருக்கும். ☐
4. வரிக்குதிரைக்குக் கொம்புகள் இல்லை. ☐
5. மாட்டிற்குக் கூரான கொம்புகள் இருக்கும். ☐

## பொருத்துக .

| | | | |
|---|---|---|---|
| 1. | நான்கு கால்கள், கூரான கொம்புகள் | – | ஒட்டகம் |
| 2. | பெரிய உருவம், நீண்ட தும்பிக்கை | – | வரிக்குதிரை |
| 3. | நீண்ட கால்கள், கருப்பு வெள்ளை வரிகள் | – | யானை |
| 4. | நீண்ட கழுத்து, உருண்டையான திமில் | – | மாடு |

## வாய்மொழியாக விடை தருக.

1. இக்கதையில் புது நண்பர் எவ்வாறெல்லாம் வருணிக்கப்படுகிறார்?

## விடை எழுதுக.

1. உடலில் கருப்பு வெள்ளை வரிகளைக் கொண்ட விலங்கு எது?
2. புதிதாக வந்த நண்பர் யார்?

## ஆதிரையின் பெட்டியில்...



இவள் ஆதிரை. சின்னச் சின்னப் பொருள்களைத் தேடித் தேடிச் சேர்த்து வைப்பாள்.

இது, ஆதிரையின் பெட்டி. எத்தனை பொருள்கள் பாருங்களேன்!



சேர்த்து வைத்தவை பற்றி எழுதி வைப்பது ஆதிரையின் வழக்கம்.




இதுபோல நீங்களும் சேகரிப்பது உண்டா? அவற்றைப் பற்றியும் எழுதலாமே!

ஆறு வேறுபாடுகளைக் கண்டுபிடித்து வட்டமிடுக






உற்றுநோக்கு → சேர் → உருவாக்கு



சேர்ப்போம்
உருவாக்குவோம்



பல்வேறு உருவங்களை உருவாக்கி மகிழுங்கள்

# குட்டிக்குரங்கின் ஒருநாள்...

















வேரில் பழுத்த **பெரிய** பலா
வேண்டும் அளவு தின்றிடுவேன்



குளத்தின் **குளிர்ந்த** நீரிலே
குதித்து விளையாடிடுவேன்



**வளைந்த** கிளையில் வாலைச்சுருட்டித்
தலைகீழாகத் தொங்கிடுவேன்



அம்மா என்னைத் தேடும் முன்னே
**விரைந்து** ஓடிச் சேர்ந்திடுவேன்



# 3. பூம்வண்டி

பூம்பூம் பூம்பூம் பூம்வண்டி
புறப்படப் போகுது ஏறிடுங்க
ஆயிஷா வண்டியின் ஓட்டுநராம்
நளனும் ஜெரினும் பயணிகளாம்





தலைநகர் டெல்லி பார்த்திடலாம்
ஸ்ரீநகர்கூட போய் வரலாம்
காடு மலைகள் பலதாண்டி
கடக்கப் போகுது பூம்வண்டி

ஆக்ரா நகரின் தாஜ்மஹால்
காஷ்மீர் ரோஜாத் தோட்டங்கள்
பார்க்க அழைக்குது பூம்வண்டி
புறப்படப் போகுது ஏறிடுங்க



## படித்தும் எழுதியும் பழகுக

ஜ் ஜ ஜா ஜி ஜீ ஜு ஜூ ஜெ ஜே
ஜை ஜொ ஜோ

ஸ் ஸ ஸா ஸி

ஷ் ஷ ஷா ஷி ஷீ ஷு ஷூ ஷெ ஷே ஷை

ஹ் ஹ ஹா ஹி ஹீ ஹு ஹூ ஹெ ஹே ஹை

ஸ்ரீ



எவரெஸ்ட்



ரோஜா




தாஜ்மஹால்



ஷாஜஹான்



ஜான்சி ராணி



ஜவஹர்லால் நேரு



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

ரம்ஜான், கிறிஸ்துமஸ், பாகிஸ்தான், ஜப்பான்,
அஸ்ஸாம், காஷ்மீர், ஸ்ரீநகர், ஜாங்கிரி, ஜிலேபி,
குலாப் ஜாமூன், பாதுஷா, பஜ்ஜி

# எறும்பூரில் இனிப்பு விழா




# பயிற்சி

யாரைப் போல் வேடமிட்டுள்ளனர்? பெயர்களை எழுதுக




படம் பார்த்துப் பெயர் எழுதுக

6WWFU2



# 4. வாழ்த்தலாம் வாங்க

பர்வீன் படம் வரைந்துகொண்டு இருந்தாள். அப்போது அஜ்மல் வந்தான்.



"ஐ! மயில். அழகாக உள்ளது, அக்கா" என்றான் அஜ்மல்.

"வா! வா! உனக்குப் பிடிக்குமே... வண்ணம் தீட்டுகிறாயா?" என்றாள் பர்வீன்.

"ஓ!" ஆர்வத்துடன் அமர்ந்தான் அஜ்மல்.

"இறகின் நடுவில் எழுத இடம் விட்டு வண்ணம் தீட்டு அஜ்மல்" என்றாள் பர்வீன்.

"ஏன் அக்கா?" என்று கேட்டான் அஜ்மல்.



"அந்த இடங்களில் ஆங்கில மாதங்களின் பெயர்களை எழுதப் போகிறேன்" என்றாள் பர்வீன்.

"இது நாள்காட்டியா அக்கா?" என்று கேட்டான் அஜ்மல்.

"இல்லை. இது நினைவூட்டி" என்றாள் பர்வீன்.

"நினைவூட்டியா... புரியும்படி சொல்லேன் அக்கா" சிணுங்கினான் அஜ்மல்.

"இதை ஆசிரியரிடம் தருவேன். அந்தந்த மாதத்தில் பிறந்தவர்களின் பெயர்களை எழுதுவோம்." என்றாள் பர்வீன்.

"எதற்காக அக்கா?" என்றான் அஜ்மல்.

"மறக்காமல் வாழ்த்து சொல்லத்தான் இந்தப் பிறந்தநாள் நினைவூட்டி" என்றாள் பர்வீன்.

"நன்றாக இருக்கிறதே. எங்கள் வகுப்புக்கும் ஒன்று செய்யலாமா அக்கா?" என்றான் அஜ்மல்.

"ஓ, செய்யலாமே! இனி எல்லாரின் பிறந்தநாளிலும் மறக்காமல் வாழ்த்தலாம்".



படித்தும் எழுதியும் பழகுக!

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | பிப்ரவரி | மார்ச்சு | ஏப்ரல் |
| மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்டு |
| செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |

# பயிற்சி

## படித்துப் பழகுக

வண்ணம் நாள்காட்டி

நினைவூட்டி

பிறந்தநாள் வாழ்த்து

## எழுதிப் பழகுக

பிறந்தநாள் வாழ்த்து ஜனவரி ஜூன்

ஜூலை செப்டம்பர் ஆகஸ்ட்

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. பர்வீன் மயில் படம் வரைந்தாள். ☐
2. அஜ்மலுக்கு வண்ணம் தீட்டப் பிடிக்கும். ☐
3. பர்வீன்செய்தது நாள்காட்டி. ☐
4. நினைவூட்டியில் தமிழ் மாதங்களின்பெயர்களை எழுதினர். ☐

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | வண்ணம் தீட்டியது | – | பர்வீன் |
| 2. | மயில் வரைந்தது | – | நினைவூட்டி |
| 3. | பிறந்தநாள் | – | பன்னிரண்டு |
| 4. | ஆங்கில மாதங்கள் | – | அஜ்மல் |

ABKI2C

## வாய்மொழியாக விடை தருக

1. அஜ்மலும் பர்வீனும் பிறந்தநாள் நினைவூட்டியை எப்படியெல்லாம் உருவாக்கினார்கள்?

## விடை எழுதுக


1. ஆங்கில மாதங்களில் முதல் மாதம் எது?
2. நீ பிறந்த ஆங்கில மாதம் எது?
3. ஆங்கில மாதங்களில் கடைசி மாதம் எது?

## இதோ உங்கள் வகுப்புக்கான பிறந்தநாள் நினைவூட்டி

**ஆங்கில மாதங்களையும் அம்மாதங்களில் பிறந்த நண்பர்களின் பெயர்களையும் எழுதுக.**




## குறுக்கெழுத்துப் புதிரில் ஆங்கில மாதங்களின் பெயர்களை நிரப்புக



# 5. ஓடி விளையாடு பாப்பா

NX1VUV



ஓடி விளையாடு பாப்பா – நீ
 ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
 குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
 கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு –என்று
 வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

சாதிகள் இல்லையடி பாப்பா –குலத்
 தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி – அன்பு
 நிறைய உடையவர்கள் மேலோர்

*– சுப்பிரமணிய பாரதியார்*




பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.

# பயிற்சி

## ஒலித்துப் பழகுக

ஓடி விளையாடு | ஓய்ந்திருக்கலாகாது | கூடி விளையாடு

குழந்தையை வையாதே | கனிவு கொடுக்கும் | சாதிகள் இல்லை

உயர்ந்தமதி

## படித்தும் எழுதியும் பழகுக

| | | | |
|---|---|---|---|
| விளையாடு | வையாதே | கனிவு | உயர்ந்த மதி |
| குழந்தை | அன்பு | படிப்பு | பாட்டு |

Z4T7G4

## பாடலில் உள்ளபடி பொருத்துக

| | |
|---|---|
| கனிவு கொடுக்கும் | விளையாட்டு |
| காலை | இல்லை |
| மாலை | மேலோர் |
| சாதிகள் | படிப்பு |
| அன்பு நிறைய உடையவர் | பாட்டு |

## பேசுவோம் வாங்க!

இப்பாடலில் பாரதியார் என்னென்ன கூறுகிறார்?

## உரையாடலைக் கவனி. சரியான தொடருக்குக் ✓ குறியிடுக.



ராமு... கலாவுக்கும் வேடிக்கைப் பார்க்க ஆசையாக இருக்கும் அல்லவா? சண்டை போடாதே. அவளுக்கும் சன்னல் ஓரத்தில் இடம் கொடு

- [ ] இருவருக்கும் சன்னல் ஓரத்தில் அமர இடம் கிடைக்கவில்லை.
- [ ] ராமு சன்னல் ஓரத்தில் அமர்ந்து இருக்கிறான்.
- [ ] கலா சன்னல் ஓரத்தில் அமர்ந்து இருக்கிறாள்.



இந்தப் பூந்தோட்டத்தில் எனக்கு மிகவும் பிடித்தவை மஞ்சள் வண்ணப் பூக்கள்

- [ ] மஞ்சள் வண்ணப் பூக்கள் மட்டுமே அழகானவை.
- [ ] பூந்தோட்டத்தில் மஞ்சள் வண்ணப் பூக்கள் மட்டுமே உள்ளன.
- [ ] பூந்தோட்டத்தில் பல வண்ணப் பூக்கள் இருக்கின்றன.



கோமதி, வழக்கமாக ஓட்டப்பந்தயத்தில் நான்தான் வெற்றி பெறுவேன். இந்தமுறை நீ வென்று விட்டாய். வாழ்த்துகள்!

- [ ] கோமதிக்கு ஓடத் தெரியாது.
- [ ] கோமதி வேகமாக ஓடுவாள்.
- [ ] கோமதி இந்தமுறை போட்டியில் கலந்துகொள்ளவில்லை.



அமுதா, நீ பாடுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். நேரம் போவதே தெரியவில்லை

- [ ] அமுதாவுக்கு நன்றாகப் பாடத் தெரியாது.
- [ ] ஆனந்திக்கு அமுதாவின் பாடல்களைக் கேட்கப் பிடிக்காது.
- [ ] அமுதா நன்றாகப் பாடுவாள்.




அத்தையின் அன்புப் பரிசான கிளி பொம்மை உடைந்துவிட்டது. வருத்தமாக இருக்கிறது.

மரியாவின் வருத்தத்திற்கான காரணம்...

- [ ] மரியாவிடம் வேறு பொம்மைகள் இல்லாததால்
- [ ] அத்தை அன்பாகக் கொடுத்த பரிசு உடைந்ததால்
- [ ] அத்தை திட்டுவார் என்பதால்

## 6. ஆத்திசூடி

ஒரு குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன.
மீன் குஞ்சு ஒன்று அதன் அம்மாவுடன்
இரை தேடச் சென்றது.






அப்போது பெரிய புழு ஒன்றைக் கண்டது.
"ஆகா! நல்ல உணவு கிடைத்துவிட்டது,
அம்மா! நான் அதைப் பிடிக்கட்டுமா?" என்று
அம்மாவைக் கேட்டது மீன்குஞ்சு.

"சற்றுப் பொறு செல்லமே!
இதுபோன்ற புழுவை நான் இந்தக் குளத்தில்
இதுவரை கண்டதில்லை. அருகே சென்று
பார்ப்போம் வா" என்று கூறியது அம்மா மீன்.





புழுவின் அருகில் சென்று பார்த்தன. " அந்தப் புழு
எதிலோ மாட்டிக்கொண்டிருக்கிறது, அம்மா"
என்றது மீன்குஞ்சு.

"ஆமாம். இதுதான் தூண்டில். இதைக்
கவனிக்காமல் பிடித்திருந்தால் நாம் இதில்
மாட்டியிருப்போம்" என்றது அம்மா மீன்.

" இனி உங்களைப் போலவே நானும் கவனமாய்
இருப்பேன், அம்மா" என்றது மீன் குஞ்சு.
புரிந்துகொண்ட மீன் குஞ்சுக்கு அம்மாவிடம்
இருந்து முத்தம் ஒன்று பரிசாகக் கிடைத்தது.



## பெரியாரைத் துணைகொள்




ரகு மாமா ஒரு செய்தி சொன்னார் அக்கா
என்ன சொன்னார்?
நம் இருவரையும் வேலைக்குக் கூப்பிட்டார்
வேலைக்கா?
ஆமாம். நம்மால் செய்யக்கூடிய எளிமையான வேலைதான் என்று கூறினார்
அப்படியா?
சாப்பாடும் தின்பண்டங்களும் கொடுப்பார்களாம்
ஓ..!
பணமும் தருவார்களாம். அவருக்கு என்னக்கா பதில் சொல்வது?
இப்பொழுது படிக்கிற வயது அல்லவா?
உங்கள் பிள்ளைகளைப் போலவே நாங்களும் படிக்கிறோம் என்று மாமாவிடம் சொல்
சரியாகச் சொன்னாய் அக்கா



## இளமையில் கல்

## ஆத்திசூடி

### கேள்வி எழுந்தது

### வழி பிறந்தது























கேள்வி முயல்



## ஆத்திசூடி




### வைகறை துயில் எழு

## ஆத்திசூடி






## வித்தை விரும்பு

# பயிற்சி

## படித்தும் எழுதியும் பழகுக

வைகறை துயில் எழு

பெரியாரைத் துணைகொள்

கேள்வி முயல்

இளமையில் கல்

வித்தை விரும்பு

ZJ36FS

## உரிய தொடரைப் படத்துடன் பொருத்துக





இளமையில் கல்

கேள்வி முயல்

வைகறை துயில் எழு

வித்தை விரும்பு





# தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம்


பல்துலக்கி

குவளை



காலுறை

சீருடை



கழுத்துப்பட்டி

பொத்தான்



வெள்ளைத்தாள்

மட்டை



அழைப்புமணி

மின்விளக்கு



மெத்தை

நகரும் படிக்கட்டு



நிலைப்பேழை

வழலைக்கட்டி



கணினி

மடிக்கணினி



சுழல் நாற்காலி

தோள்பை



தொலைக்காட்சி

தொலைபேசி


## வந்த பாதை

### பொருத்தமான தொடருக்குக் ✓ குறியிடுக



மீன் தண்ணீரில் நீந்துகிறது ☐

மீன் துள்ளிக் குதிக்கிறது ☐

மீன் தண்ணீரில் மிதக்கிறது ☐



வானூர்தி மேலே ஏறுகிறது ☐

வானூர்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ☐

வானூர்தி கீழே இறங்குகிறது ☐



இது மாலை நேரம் ☐

இது இரவு நேரம் ☐

இது பகல் நேரம் ☐

### என்ன செய்கிறார்கள்? எழுதுக



மரம்



மரத்தில் ஒரு கூடு




கூட்டில் ஒரு பறவை

பறவை என்ன செய்கிறது?



தோட்டம்



தோட்டத்தில் ஒரு மலர்



மலரில் ஒரு வண்ணத்துப் பூச்சி


வண்ணத்துப் பூச்சி என்ன செய்கிறது?



ஆறு



ஆற்றில் நீர்



நீரில் மீன்

மீன் என்ன செய்கிறது?

## எந்த வாகனம் எந்த விலங்கிற்கு உரியது? எழுதுக – காரணம் கூறுக


**மான், பூனை, புலி, வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி, சிறுத்தை**













## தொடரை நீட்டித்து எழுதுக



குடை

**கருப்புக்** குடை

**பெரிய** கருப்புக் குடை

**தாத்தாவின்** பெரிய கருப்புக் குடை



ஊஞ்சல்

__________ ஊஞ்சல் ( மர/ இரும்பு )

__________ __________ ஊஞ்சல் (சிவப்பு/ மஞ்சள்)

__________ __________ __________ ஊஞ்சல் (பெரிய/ சிறிய)



மலர்

_________________

________________________________

_________________________________________________

## செய்திகளைப் படித்தறிக




## முதல் எழுத்தை மாற்றி உணவுப் பொருளாக்குக



| | |
|---|---|
| கடை | வடை |
| ஏரி | |
| ஆறு | |
| மோப்பம் | |
| தேர் | |
| வண்டல் | |
| உப்பளம் | |
| செங்கல் | |
| ஆசை | |

# கற்றல் விளைவுகள்

| 1. கேட்டல் | 2. பேசுதல் | 3. படித்தல் | 4. எழுதுதல் | 5. நடைமுறை இலக்கணம் |
|---|---|---|---|---|
| • படங்கள், ஓவியங்கள், கதைப்படங்களை நுட்பமாக உற்றுநோக்கியும் சொல்லக்கேட்டும் சுவைப்பர்.<br>• கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.<br>• சிந்தனையைத் தூண்டும் எளிய கதைகளைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.<br>• எளிய வாய்மொழி அறிவுரைகளையும் கட்டளைகளையும் வினாக்களையும் கேட்டுப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுவர்.<br>• பிறர் பேசுவதைப் பொறுப்புடனும் கவனத்துடனும் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர். | • ஓசைநயமிக்க பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுவர்.<br>• படக்கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுவர்.<br>• செய்திகளைத் திரட்டும் பொருட்டு வினா எழுப்புவர்.<br>• பார்த்தவை, கேட்டவை பற்றிப் பேசுவர்.<br>• கேட்டும் படித்தும் அறிந்த பாடல்கள், கதைகளிலிருந்து கேட்கப்படும் எளிய வினாக்களுக்கு முழுமையான சொற்றொடரில் விடை கூறுவர்.<br>• சொற்கள், தொடர்களை முறையாகவும் சரியாகவும் ஒலிப்பர்.<br>• கேட்டறிந்த கதைகள், பாடல்களைத் தம் கற்பனையின் அடிப்படையில் கூறுவர். தமக்குரிய நடையில் பேசுவர்.<br>• கேட்டவற்றுடன் தம் அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பொருள் விளங்கும் வகையில் தெளிவாக வெளிப்படுத்துவர். | • தமிழ்மொழியிலுள்ள அனைத்து எழுத்துகளின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்புகளை இனங்கண்டு முறையாக உச்சரிப்பர்.<br>• வடமொழி ஒலிப்புகளுக்குரிய, கிரந்த வரிவடிவங்களை அறிந்து படிப்பர்.<br>• எளிய சொற்கள், சிறுசிறு தொடர்களை உரிய ஒலிப்புடன் உரக்கப் படிப்பர்.<br>• எளிய சந்தப் பாடல்களை உரிய ஓசையுடன் படிப்பர்.<br>• எளிமையான சிறுசிறு படக்கதைகளையும் பாடல்களையும் படிப்பர்.<br>• படிக்கும் பகுதியின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• படித்த பகுதியில் கேட்கப்படும் சிறுசிறு வினாக்களுக்கு விடையளிப்பர். | • படங்களைப் பார்த்துப் பெயர்கள், சிறுசிறு தொடர்களைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்.<br>• வடமொழி ஒலிப்புகளுக்குரிய, கிரந்த வரிவடிவங்களை அறிந்து எழுதுவர்.<br>• சொற்களையும், சிறுசிறு தொடர்களையும் சொல்லக்கேட்டு எழுதுவர்.<br>• எளிய பாடல்கள், கதைகள், உரைநடைப் பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு முழுமையான தொடர்களில் விடையளிப்பர்.<br>• சிறுசிறு தொடர்களைத் தம்முடைய நடையில் எழுதுவர்.<br>• கேட்டவற்றை/ படித்தவற்றை / சிந்தித்து உணர்ந்தவற்றைப் படங்களாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ வெளிப்படுத்துவர். | • ஒலி இயைபுச் சொற்களை உருவாக்குவர்.<br>• ஒருமை, பன்மை விகுதிகளை (கள், க்கள், ங்கள்) அறிந்து பயன்படுத்துவர்.<br>• பெயர்ச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை அறிந்து பயன்படுத்துவர். |

| 6. கற்கக் கற்றல் | 7. சொல்லாட்சித் திறன் | 8. படைப்புத் திறன் | 9 . விழுமியங்கள் | 10. வாழ்வியல் திறன் |
|---|---|---|---|---|
| • படக்கதைகளைப் பார்த்தறிந்து / படித்தறிந்து கதை கூறுவர்.<br>• பெயர்ப்பலகைகள், அறிவிப்புகளைப் படிப்பர்.<br>• விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர். | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br>• பெயர்ச்சொற்கள். வினைச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள்<br>• வீடு, பள்ளியில் உள்ள பொருள்களின் பெயர்கள்<br>• குடும்ப உறுப்பினர் பெயர்கள்<br>• தின்பண்டங்களின் பெயர்கள்<br>• எளிய வருணனைச் சொற்கள்<br>• ஆங்கில மாதங்களின் பெயர்கள் | • முதல் எழுத்தை மாற்றி வேறு சொற்களை உருவாக்குவர்.<br>• குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பல்வேறு சொற்களை எழுதுவர்.<br>• கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து பல்வேறு சொற்களை உருவாக்குவர்.<br>• முதல் சொல்லின் இறுதி எழுத்தை அடுத்த சொல்லின் முதல் எழுத்தாகக் கொண்டு சொற்களை உருவாக்குவர். | • நேரந்தவறாமை.<br>• விதிகளைப் பின்பற்றுவர்.<br>• தூய்மை பேணுவர்.<br>• பொருள்களைப் பாதுகாப்பர்.<br>• பிறருக்கு உதவுவர்.<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவர். | • கீழ்க்காணும் வாழ்வியல் திறன்களைப் பெற்று உரிய நேரங்களில் பயன்படுத்துவர்.<br>• தன்னை அறியும் திறன்.<br>• சிக்கல் தீர்க்கும் திறன்.<br>• முடிவெடுக்கும் திறன்.<br>• கூர்சிந்தனைத் திறன்.<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்.<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்.<br>• உறவுகளை இணக்கத்துடன் பேணும் திறன்.<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்.<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்.<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன். |

# தமிழ் – இரண்டாம் வகுப்பு
## பாடநூல் உருவாக்கக் குழு

### மேலாய்வாளர்கள்

முனைவர் **ச. மாடசாமி,** பேராசியர் ( ஓய்வு), சென்னை.

திரு. ச. **தமிழ்ச்செல்வன்** எழுத்தாளர், சிவகாசி.

திருமதி **ஏ.எஸ். பத்மாவதி** எழுத்தாளர், சென்னை.

### வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **வெ. உஷாராணி,** முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

திருமதி இரா. **பொன்மணி** , விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர்,
திருவள்ளூர் மாவட்டம்.

### நூலாசிரியர்கள்

முனைவர் **அ. மாசிலாமணி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
குருக்கத்தி,நாகப்பட்டினம் மாவட்டம்.

திருமதி **வே. சுடரொளி,** இடைநிலை ஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, கொரட்டூர்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

செல்வி **பா. ப்ரீத்தி,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சீர்ப்பனந்தல்,
ரிஷிவந்தியம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

திரு. **வெ. ராஜா** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம் ஒன்றியம், சேலம் மாவட்டம்.

திரு. **பா. ச. குப்பன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஐயந்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திருமதி **பா. கற்பகம்,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஐயப்பநகர்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி **வீ. சௌரீஸ்வரி,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, குமரன்கட்டம்,
ஆனைமலை ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.

திருமதி **அ. கலைவாணி,** பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காளம்பாளையம்,
தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.

திருமதி **ச. பஞ்சவர்ணம்,** தலைமை ஆசிரியர், ஊராட்சி
ஒன்றிய தொடக்கப்பள்ளி, தாம்பரம், சானிடோரியம், சென்னை.

திரு. **கு.வ. மகேந்திரன்** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெரிய குக்குண்டி,
ஆற்காடு ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திருமதி **த. ஜெயமாரி,** இடைநிலை ஆசிரியர்,
ஸ்ரீஜெயேந்திர சுவாமிகள் மேனிலைப்பள்ளி,
மகாராஜா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

### ஓவியர்கள்

திரு. **சோ. வேல்முருகன்,** ஓவிய ஆசிரியர்,
அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம்.

திரு. **கே.மதியழகன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ. நடு நிலைப்பள்ளி, ஊத்துக்காடு, வலங்கைமான் ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம்.

திரு. **கோபு சுப்பையன்,**
ஐ திங் கிரியேஷன்ஸ், வடபழனி, சென்னை.

திரு. **தே.துரை,** ஓவிய ஆசிரியர்,
பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், திருச்சி.

திரு. **சு. மனோகரன்,** ஓவிய ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, சிலமலை, தேனி.

திரு. **த.தா.மு. பிரபுராஜ்,** ஓவிய ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, மணிமங்கலம், குன்றத்தூர் ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு. **கா. தனஸ் தீபக் ராஜன்**

திரு. **கா. நலன் நான்சி ராஜன்**

திரு. **நா. காசி ராஜன்**

திரு. **வேல்முருகன் இராதாகிருஷ்ணன்**

திரு. **பா. பிரமோத்**

திரு. **சு. முரளி**

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

திரு. இரா. ஜெகநாதன், இடைநிலைஆசிரியர்,
ஊராட்சிஒன்றியநடுநிலைப்பள்ளி, கணேசபுரம், போளூர்
,திருவண்ணாமலை.

திரு. சூ.ஆல்பர்ட் வளவன் பாபு ,பட்டதாரிஆசிரியர்
அரசினர்உயர்நிலைப்பள்ளி, பெருமாள் கோவில்,
பரமக்குடி, இராமநாதபுரம்

திரு. மு.சரவணன் , பட்டதாரிஆசிரியர்,
அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, வாழப்பாடி, சேலம்

### பக்க வடிவமைப்பாளர்

ஓவியர் திரு. **கு. கலைச்செல்வன்,** சென்னை.
திரு. சி. அடைக்கல ஸ்டீபன்.
திரு. சி. பிரசாந்த்

### தரக்கட்டுப்பாடு

திரு. ராஜேஷ் தங்கப்பன்
திரு. கி.ஜெரால்டு வில்சன்

### ஒருங்கிணைப்பாளர்

திரு. ரமேஷ் முனிசாமி,